DIOCESE OF KUMBAKONAM

NEWS - LETTER

(Compiled and Edited by Diocesan News-Letter Committee)

VOL. : 51 JUNE - 2024 No. 6



'படைப்பாற்றலின்
கதவை திறக்கக்கூடியது கல்வி'

ஆயரின் கல்விச் செய்தி...

அனைவருக்கும் புதிய கல்வி ஆண்டு வணக்கம், வாழ்த்து, ஆசிர்...

படித்தவர் படிக்காதவர், பணக்காரர் ஏழை, உழைப்பவர் உழைக்காதவர், இருப்பவர் இல்லாதவர், உயர்ந்தவர் உயராதவர் என்று யாராக இருந்தாலும் பெற்றோர்கள், உறவுகள், நட்புகள் சந்தித்துக் கொள்கின்றபோது பிள்ளையைப் பள்ளிக்கூடத்தில் சேர்த்திட்டியா, பிள்ளை என்ன படிக்கிறது, எந்த பள்ளிக்கூடத்தில் சேர்த்த... என்று தான் ஜூன் மாதத்தில் நல அக்கறை விசாரணைகள் நடத்திக்கொள்வார்கள். பள்ளிக்கூடங்கள் கோவில்களுக்கு இணையானது மட்டுமல்ல கோவில்களைவிட உயர்ந்தது என்று சொல்வதில் பிழை இல்லை. தேவாலயத்துக்குச் செல்வதற்கு கிறிஸ்தவனாக இருக்கவேண்டும், மசூதிக்குச் செல்வதற்கு முகமதியராக இருக்கவேண்டும், கோவிலுக்குச் செல்வதற்கு இந்துவாக இருக்கவேண்டும் ஆனால் பள்ளிக்கூடம் செல்லவேண்டும் என்றால் மனிதனாக இருந்தால் மட்டும்போதும்.

“அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல்
ஆலயம் பதினாயிரம் நாட்டல்
பின்னருள்ள தருமங்கள் யாவும்
பெயர் விளங்கி ஒளிர நிறுத்தல்
அன்னையாவினும் புண்ணியம் கோடி
ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்”. என்ற பாரதியின் பாடல் படிப்பு எப்படி மனித அறநெறிகளில் மேன்நெறிமிக்கதாக இருப்பதை அறிவுக்கொண்டுப் புரிந்துகொள்ள முடிகிறது.

கற்றவன் கண் பெற்றவன்
கல்லாதவன் கண் அல்லாதவன்.

குரு தன் ஆசிரமத்தில் தன்னிடம் பயின்ற சீடர்களிடம் உங்களுக்குப் பயிற்சிகள் முடிந்துவிட்டன. எனவே உங்கள் வீடுகளுக்குச் செல்லலாம் என்றார். சீடர்கள் ஆச்சரியம் மேலிட தேர்வு எதுவும் வைக்காமல் பயிற்சி முடிந்துவிட்டது என்கிறாரே குரு என்று ஒருவர் ஒருவரைப்பார்த்துக்

கேட்டுக்கொண்டனர். ஆனால் குரு சொல்லிவிட்டார் என்பதால் தங்கள் ஊருக்குப் பயணப்பட்டார்கள். போகும் வழியில் முட்கிளைகள் பாதை நெடுக கிடந்தது. எனவே சீடர்கள் சிலர் கவனமாக முட்களை தாண்டி சென்றனர், சிலர் ஒதுங்கி சென்றர். சிலர் குதித்து குதித்து தாண்டி சென்றனர். இரண்டு சீடர்கள் மட்டும் பொறுமையாக முட்களை ஒன்று சேர்த்து பாதையில் நடப்பவர்களுக்கு பாதகமோ இடையூரோ இல்லாமல் பாதைக்கு வெளியில் குவித்து வைத்துச் சென்றனர். சீடர்கள் சென்ற பாதையின் எதிர்புறம் தூரத்தில் குரு நின்று கொண்டிருந்தார். முன்னதாக சென்ற சீடர்கள் குருவை வணங்கி நின்றார்கள், தாமதமாக வந்த இரண்டு சீடர்களும் வந்து குருவை வணங்கி நின்றார்கள். அப்போது குரு சொன்னார் உங்களில் இருவர் மட்டுமே முழுமையாக பயிற்சிகளை கற்று தனித்து செயல்பட தேர்ச்சிப்பெற்றிருக்கிறார்கள். அவர்கள் இருவர் மட்டும் தங்கள் வீடு செல்லலாம் மற்றவர்கள் ஆசிரமத்துக்கு திரும்பி சென்று பயிற்சிப்பெறுங்கள் என்று அனுப்பி வைத்தாராம். இந்த கதையில் புதுமை ஒன்றும் இல்லை, பழமைதான் என்றாலும் கல்வி என்பது தன்சார்பு கொண்டதல்ல; கல்வி தன்னோடு வாழும் பிறரையும் சேர்த்த கரிசனையை ஊட்டுவதே உண்மையான கல்வி என்பதையே இந்த கதை நமக்கு உணர்த்தும் உண்மை.

கல்வி என்பது நம்பிக்கையை உருவாக்க வேண்டும், பிரச்சனைகளை எதிர்கொள்ளுவதற்கான ஊக்கத்தைத் தரவேண்டும், அடுத்தவர்களுக்காக இரங்கிவருகின்ற இதயத்தை உருவாக்க வேண்டும், போட்டியாளர்களைக்கூடச் சக நண்பர்களாக கருதக்கூடிய மனதை தரவேண்டும், விழுந்து கிடக்கிறவர்களை எழுந்து நிற்கவைக்கக்கூடிய எண்ணத்தைத் தரவேண்டும், அநீதிக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டும் என்ற எண்ணத்தைத் தரவேண்டும், ஊழலுக்கு எதிராக உரக்க நின்று பேசுகின்ற எண்ணத்தைத் தரவேண்டும், எல்லா மனிதர்களும் சக சம மனிதர்கள் என்ற எண்ணத்தைத் தரவேண்டும். இத்தகைய எண்ணங்களையும் செயல்களையும் செய்விப்பது மட்டுமே உண்மையான கல்வி, இல்லையேல் அது வெறும் குப்பை. 95 / 100 மதிப்பெண்கள் எடுப்பது மட்டும் கல்வியல்ல; மனிதனை மனிதனாக

மெருகேற்றி மேன்மைப்படுத்துவதே கல்வியாகும். உலகத்தில் கல்வியில் சிறந்த நாடான பின்லேண்டில் சொல்கிறார்கள், "பள்ளிக்கூடத்தில் பிள்ளைகள் இங்கே படிப்பது இல்லை கற்கிறார்கள்." ஆனால் நம் நாட்டிலும் வீட்டிலும் பிள்ளைகள் கற்பது இல்லை படி படி படி என்று நெருக்கடியைத்தான் பிள்ளைகளுக்கு தருகிறோம். ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஒரு பேராற்றல் புதைந்திருக்கிறது. அதை கணடுணர்ந்து வெளிக்கொணர்வதுதான் கல்வி. "தனித்திறன் ஆற்றலை கண்டறிவதே கல்வி" என்று சுவாமி விவேகானந்தர் கூறுகிறார். பணக்காரர்களோடு பழகுவதால் பணம் நம்மிடம் வந்து சேர்வது இல்லை. ஆனால் படித்தவர்களுடன், அறிஞர்களுடன் பழகும்போது கல்வி நம்மை வந்து சேரும் என்பதில் ஐயம் இல்லை.

"வெள்ளத்தால் போகாது

வெந்தனலால் வேகாது

வேந்தரால் கொல்லத்தான் இயலாது

கொடுத்தாலும் நிறைவின்றி குறையாது" என்று விவேக சிந்தாமணி கூறுவதன் வழியாக கல்வி எத்தகையதாகச் சிறந்த ஆற்றல் மிக்கது என்பதை புரிந்துக் கொள்ளமுடிகிறது.

ஓஷோ சொல்கிறார் "நமது கல்வி முழுவதும் பாழாகிவிட்டது. இது நிச்சயமாக உங்களை எழுத்தாளர்களாக, தபால்காரர்களக, போலீஸ் கமிஷனர்களாக ஆக்குகிறது. அது உங்களுக்கு வாழ்வாதாரத்தைத் தருகிறது. ஆனால் அது உங்களுக்கு வாழ்க்கையை தராது, அன்பையும் தராது, தியானத்தையும் தராது" என்று சொல்வதன் வழியாக கல்வியின் தரமும், தாக்கமும், தர்மமும் தாழ்நிலைக்குச் சென்றுவிட்டது என்பதைதான் புரிந்துக்கொள்ள முடிகிறது.

கல்வியின் மேன்மையைப்பற்றி சிந்திக்கின்றபோது

"படிக்காமல் இருப்பதைவிட

பிறக்காமல் இருப்பது மேல்" என்கிறார் பிளேட்டோ.

“இந்த உலகத்தையே மாற்றக்கூடிய
ஒரே ஆயுதம் கல்வி” என்கிறார் நெல்சன்மண்டேலா.
“படிக்கத் தெரியாத மந்திரியாக இருப்பதைவிட
படிக்கத் தெரிந்த ஏழையாக இருப்பது மேல்” என்கிறார் மெக்காலே.
“இதயத்தைத் தொடாத கல்வி கல்வியே அல்ல” என்கிறார் அரிஸ்டாட்டில்
“ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்” என்கிறது உலகநீதி.
“இளமையில் கல்” என்கிறது ஆத்திச்சூடி
“கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சைபுகினும் கற்கை நன்றே” – என்கிறது நெடுந்தொகை.
“பொன்னைவிட ஞானத்தைப் பெறுவதே மேல்” என்கிறது நீதிமொழிகள் 16:16
“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு” (குறள் எண். 396) என்று ஐயன் வள்ளுவர் படிக்கப் படிக்க கிடைக்கும் அறிவு யேகத்தை குறிக்கிறார். ஆக, கல்வியின் மகத்துவம் ஆன்றோர்களாலும் சான்றோர்களாலும் நமக்கு தெள்ளத் தெளிவாகவே அறிவுறுத்தப்பட்டிருக்கிறது.

பிள்ளைகள் பெற்றவர்களிடம் இருப்பதைவிட ஆசிரியர்களிடம் தான் அதிகம் வாழ்கிறார்கள். எனவே ஆசிரியர்களின் பணி, பெற்றோரின் பொறுப்பு நிலையில் மாணவர்களின் ஆன்மாவோடு தொடர்புடையவர்களாக பணியாற்ற வேண்டும். இறைவன் கொடுத்த ஆயுளை எந்த ஒரு ஆசிரியரும் முழுமையாக வாழ்ந்து விட்டுச்செல்வதில்லை”. என்று பெர்னாட்ஷா சொல்கிறபோது ஆசிரியர்கள் மாணவர்களுக்காக தங்கள் ஆயுளை எந்தளவிற்கு உழைத்து இழக்கிறார்கள் என்பதையே சுட்டிக்காட்டுகிறபோது பெற்றோர்களைவிட ஆசிரியர்களே ஒரு நிலை மேல் எழுந்து நிற்கிறார்கள். தங்கள் ஆயுளை கொடுத்து தங்களை உருவாக்கும் ஆசிரியர்களுக்கு மாணவர்கள் எந்தளவிற்கு மதிப்பும் மரியாதையும் நன்றியும் மிக்கவர்களாக நடந்து கொள்கிறோம் என்று தன்பரிசோதனை செய்து பார்த்துக்கொள்ள வேண்டும்.

"எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை

செய்நன்றி கொன்ற மகர்க்கு" (குறள் எண். 110) என்று ஐயன் வள்ளுவர் செய்நன்றி மறந்தவர்கள்மீது காட்டும் சொற்சீற்றம் நம்மை அதிரவைப்பதை மறக்க வேண்டாம். ஆசிரியர்களும் அறம் சார்ந்த அறம் மீறாத பெற்றோர்களாக தங்கள் மாணவர்களிடம் வாழ்ந்து காட்ட வேண்டும். பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை எதிர்கால பணம் ஈட்டும் ATM களாக கருதாமல் ஒழுக்கமும், அறமும், பொறுப்பும், கரிசனையும், அன்பும், அக்கறையும் மிக்கப்பிள்ளைகளை உருவாக்குவதில் கவனம் செலுத்த வேண்டுகிறேன்.

"சட்டங்கள் ஆள்வதும் பட்டங்கள் செய்வதும்

பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்

ஏட்டுமறிவினில் ஆணுக்கிங்கே பெண்

இளைப்பில்லை காணென கும்மியடி" என்று பாரதி பெண் விடுதலை கல்வியில்தான் உண்டு என்பதை கொண்டாடி கும்மியடித்த கனவு 21-ம் நூற்றாண்டில் நிதர்சனமாகி பெண்பிள்ளைகள் வாழ்வில் நிறைவேறிக் கொண்டிருப்பதில் ஆண் பிள்ளைகளும் பெருமையுற்று பெண்களின் கனவுலக உணர்வுகளை அறத்தோடும், சமத்துவத்தோடும் கொண்டாடுகின்ற கல்வியாக அமைவதே முழுமைபெற்ற கல்வியாக இருக்கமுடியும் அல்லாதபோது கல்வியின் மகத்துவத்தையே தரம் குறைத்துவிடுகிறோம் என்பதை மறக்கவேண்டாம்.

பொறுப்பூட்டாத கல்வியும்
உணர்வூட்டாத கல்வியும்
அன்பூட்டாத கல்வியும்
இருந்து என்ன லாபம்
கற்று என்ன லாபம்
எல்லாம் பாழே
என்பதை புரிந்து வாழ்வோம்.

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக" (குறள் எண். 391)

தோழமையுடன்,

+ ஆயர் A. ஜீவானந்தம்.

BISHOP'S PROGRAMME

01	Sat	06.30 p.m.	Mass: Thuraiyur
02	Sun	06.00 p.m.	Corpus Christi: Kumbakonam
04	Tue	05.30 p.m.	School Blessing: Ayyampet
05	Wed	05.30 p.m.	Mass: Melnariyapannur
07	Fri	12.00 noon	Mass: Sacred Heart Church: Pondicherry
		06.00 p.m.	Jubilee Mass: Chennai
09	Sun	06.00 p.m.	Corpus Christi: Periyaverseeli
10-11	Mon -	Tue	Class: Francesco Capuchins Seminary, Vengangudy
12	Wed	06.30 p.m.	Feast Mass: Nall Road, Kumbakonam
13	Thu	04.00 p.m.	Blessing of the Parish Church: Jeyankondam
15	Sat	06.00 p.m.	Mass: Thirukkavalur
19	Wed	10.00 a.m.	Academic Inaugural Meeting: St Peter's Seminary, Bangalore
21	Fri	10.00 a.m.	Mass: Sacred Heart Seminary: Chennai
24	Mon	09.30 a.m.	Visitors' Day - Fathers and Sisters
25	Tue	10.00 a.m.	Senate Meeting: Kumbakonam
		03.00 p.m.	Council Meeting: Kumbakonam
26	Wed	10.00 a.m.	Pastoral Commisssions' Meeting: Kumbakonam
27	Thu	09.30 a.m.	Visitors' Day - Lay People

PAPAL INTENTION FOR JUNE - 2024



FOR MIGRANTS FLEEING THEIR HOMES:

We pray that migrants fleeing from war or hunger, forced to undertake journeys full of danger and violence, find welcome and new opportunities in the countries that receive them.

"The Heart of Jesus is the ultimate symbol of God's mercy."

Pope Francis

Happy Feast of
Sacred Heart of Jesus!

BIRTHDAY

02.06.1985	Fr. P. John Maria Vianney	Pondicherry
02.06.1944	Fr. M. S. Selvaraj	USA
02.06.1964	Fr. U. S. Arockiasamy	Thottiyam
02.06.1984	Fr. A. Marceline Antony Raj	Padalur
03.06.1985	Fr. I. Edisonraj	Rome
09.06.1982	Fr. B. John Bosco	Tindivanam
11.06.1970	Fr. S. Eugene Karunakaran	USA
15.06.1973	Fr. S. J. Soosaimanickam	Ammanpettai
16.06.1975	Fr. A. Victor Paulraj	Kumbakonam
26.06.1973	Fr. A. Arockia Sahayaraj	Melaneduvai
27.06.1974	Fr. J. Regis	Pudukottai
29.06.1978	Fr. A. Benedict Prabaharan	Coimbatore

NECROLOGY

07.06.1969	Rev. Fr. S. Arokiasamy	Annamangalam
07.06.2020	Rev. Fr. M. Santiago	Manickapuram
09.06.1990	Rev. Fr. G. Maria Alphonse	Kumbakonam
10.06.1961	Rev. Fr. Arumainathar	Kumbakonam
11.06.1989	Rev. Fr. Sanjeevi	Ammanpet
16.06.1989	Rev. Fr. T. Arokiasamy	Kokkudi

18.06.1953	Rev. Fr. P. M. Stephen	Purathakudi
20.06.1998	Rev. Fr. A. Rayappar	Poondi
22.06.1982	Rev. Fr. A. Arulnathar	Coimbatore
24.06.1966	Rev. Fr. George Kadanthot	Pudukottai
29.06.1983	Rev. Fr. A. Mariasamy	Kumbakonam
29.06.2012	Rev. Fr. V. Antonisamy	Elakurichy

ORDINATION DAY

07.06.1978	Fr. P. Henry Pushparaj	Viragalur
07.06.1978	Fr. S. Selvarayar	Keelaneduvai
07.06.1978	Fr. A. Santiagu	Kallakudi
07.06.1978	Fr. A. Samson	Konalai
08.06.1985	Fr. S. Augustine	Kottapalayam
08.06.1985	Fr. A. Maria Francis	Kumbakonam
08.06.1985	Fr. Martin de Porres	Thirumanthurai
11.06.1973	Fr. M. S. Selvaraj	USA
11.06.1973	Fr. P. Joseph	Pullambadi
15.06.1983	Fr. C. Peter Francis	Thiruvaiyaru
15.06.1983	Fr. L. Benjamin	Vilagam
17.06.1974	Fr. S. A. Chinnappan	Kumbakonam
17.06.1974	Fr. A. Antony Joseph	Kumbakonam
29.06.1977	Fr. S. I. Arulsamy	Mathur
30.06.1975	Fr. R. Vincent Ferrer	Ayakudi

Letter of Pope Francis to Parish Priests

2 May 2024

Dear Brother Priests,

The International Meeting “Parish Priests for the Synod”, and the dialogue with all of you who have taken part, provide me with the opportunity to pray for the parish priests the world over. To all of you, I address these words with great affection.

It is so obvious as to sound almost banal, but that does not make it less true: the Church could not go on without your dedication and your pastoral service. So before all else, I would like to express my gratitude and appreciation for the generous work that you do each day, sowing seeds of the Gospel in every kind of soil (cf.Mk4:1-25).

As you have experienced in these days of sharing, the parishes in which you carry out your ministry vary widely, from those on the outskirts of great cities – as I know personally from Buenos Aires – to those in sparsely populated areas that are the size of vast provinces. They range from those in town centres in many European countries, where ancient basilicas house dwindling and aging communities, to those where celebrations are held beneath the branches of great trees and the songs of birds mix with the voices of small children.

Parish priests are well aware of this, since they know from within the life of God’s People their joys and hardships, their resources and their needs. For this reason, a synodal Church needs its parish priests. Without priests, we will never be able to learn how to walk together and to set out on the path of synodality, “the path which God expects of the Church of the third millennium”.

We will never become a synodal and missionary Church unless parish communities are distinguished by the sharing of all the baptized in the one mission of proclaiming the Gospel. If parishes are not synodal and missionary, neither will the Church be.The

Synthesis Report of the First Session of the XVI Ordinary General Assembly of the Synod of Bishops is very clear in this regard. Parishes, beginning with their structures and the organization of parish life, are called to think of themselves "primarily as being of service to the mission that the faithful carry out in society, in family life and the workplace, without concentrating exclusively on their own activities and their organizational needs" (8.1). Parish communities increasingly need to become places from which the baptized set out as missionary disciples and to which they return, full of joy, in order to share the wonders worked by the Lord through their witness (cf.Lk10:17).

As pastors, we are called to accompany in this process the communities that we serve, and at the same time to commit ourselves with prayer, discernment and apostolic zeal in ensuring that our ministry is suited to the needs of a synodal and missionary Church.

This challenge is set before the Pope, the bishops and the Roman Curia, and it is also set before you, as parish priests. The Lord who has called us and consecrated us asks us today to listen to the voice of his Spirit and to advance in the direction that he points out to us. Of one thing we can be sure: he will never leave us without his grace. Along the way, we will discover how to set our ministry free from the things that wear us down and rediscover its most authentic core, the proclamation of God's word and the gathering of the community for the breaking of bread.

I encourage you, then, to accept this, the Lord's call to be, as parish priests, builders of a synodal and missionary Church and to devote yourselves enthusiastically to achieving this goal. To this end, I would like to offer three suggestions that can help to inspire your lifestyle and activity as pastors.

1. I ask you first to live out your specific ministerial charism in ever greater service to the varied gifts that the Spirit sows in the People of God. It is urgent to "discover with faith, the many and varied

charismatic gifts of the laity, be they of a humble or more exalted form" (Second Vatican Ecumenical Council, Decree on the Ministry and Life of Priests Presbyterorum Ordinis, 9), which are indispensable for evangelizing any number of human situations and contexts. I am convinced that in this way you will bring to light many hidden treasures and feel less alone in the demanding task of evangelization. You will experience the joy of being true fathers, who do not dominate others but rather bring out in them, men and women alike, great and precious possibilities.

2. With all my heart, I suggest that you learn to practice the art of communal discernment, employing for this purpose the method of "conversation in the Spirit", which has proved so helpful in the synodal journey and in the proceedings of the synodal Assembly itself. I am certain that you will reap from it many good fruits, not only in structures of communion such as parish councils, but in many other fields as well. As the Synthesis Report makes clear, discernment is a key element in the pastoral activity of a synodal Church: "It is important that the practice of discernment be exercised also in pastoral settings, in a way adapted to differing contexts, in order to illumine the concreteness of ecclesial life. This will help to recognize better the charisms present within the community, to distribute wisely different responsibilities and ministries, and to plan in the light of the Spirit pastoral projects that go beyond the mere programming of activities" (2.1).

3. Finally, I would like to urge you to base everything you do in a spirit of sharing and fraternity among yourselves and with your bishops. This is something that emerged forcefully from the International Conference for the Permanent Formation of Priests, on the theme, "Fan into Flame the Gift of God that You Possess" (2 Tim1:6), which took place last February here in Rome, with over 800 bishops, priests, lay and consecrated men and women, engaged in this area and representing some 18 countries. We cannot be authentic fathers unless we are first sons and brothers. And we cannot foster communion and participation in the communities

entrusted to our care unless, before all else, we live out those realities among ourselves. I am quite aware that, amid the constant call of our pastoral responsibilities, this commitment may seem burdensome, even a waste of time, but the opposite is true: indeed, only in this way will we be credible and our activity not end up scattering what others have already gathered.

It is not only the synodal and missionary Church that needs parish priests, but also the ongoing process of the 2021-2024 Synod, "For a Synodal Church: Communion, Participation, Mission", as we look forward to the Second Session of the XVI Ordinary General Assembly of the Synod of Bishops, which will take place in the coming month of October. In order to prepare for it, we need to hear your voice.

For this reason, I invite those who have taken part in the International Meeting "Parish Priests for the Synod" to be missionaries of synodality, among yourselves and, once you return home, with your fellow parish priests. I ask you to encourage reflection, with a synodal and missionary mindset, on the renewal of the ministry of parish priests, and enable the General Secretariat of the Synod to gather your distinctive contributions in view of the preparation of the Instrumentum Laboris. The purpose of the present International Meeting was to listen to parish priests, but that cannot finish today: we need to continue to hear from you.

Dear brothers, I am at your side in this process, in which I myself am taking part. I bless all of you from the heart, and in turn, I need to feel your closeness and the support of your prayers. Let us entrust ourselves to the Blessed Virgin Mary Hodegetria, Our Lady of the Way. She shows us the way; she leads us to Jesus, who is the Way, the Truth, and the Life.

Rome, Saint John Lateran, 2 May 2024

FRANCIS

Priests' Transfer List 2024

Diocese of Kumbakonam

Vicar General — **Rev. Fr. M. Philomindas**

1. PARISHES

1. Achanur (P.P.)	Fr. J. Maria Jomicks
2. Ammanpettai (P.P.)	Fr. P. Augustine
3. Andimadam (P.P.)	Fr. I. Adaikalasamy
4. Jayankondam (P.P & V.F.)	Fr. S. Joseph Kennedy
5. K.V. Pet (P.P.)	Fr. A. Arockiasamy
6. Keela Michaelpatti (P.P.)	Fr. A. Victor Paulraj
7. Konalai (P.P.)	Fr. S. Mariadas
8. Koovathur (P.P.)	Fr. M. A. Thanaraj
9. Kottapalayam (P.P.)	Fr. J. Michaelraj
10. Kulamanickam (P.P.)	Fr. L. Benjamin
11. Kulumur (P.P.), Correspondent of the Schools at Kulumur and Sendurai	Fr. A. Roch Alexander
12. Kumbakonam (V.F. & P.P.)	Fr. G. Cosmon Arockiaraj
13. Kumilankuzhy (P.P.)	Fr. A. Samson
14. Konnaikudi (P.P.)	Fr. A. William Fernandez
15. Irungalur (P.P.)	Fr. A. Mark Marceline
16. Malathankulam (P.P.)	Fr. S. Joseph Arockiaraj

17. Mathur (P.P.)	Fr. S. Vincent
18. Noothapur (P.P.)	Fr. V. Maria Susai
19. Papanasam (P.P.)	Fr. A. Maria Francis
20. Pattanamkurichy (P.P.)	Fr. A. Maria Louis
21. Perambalur (P.P. & V.F.)	Fr. A. Suvakin
22. Pudukuppam (P.P.)	Fr. A. Eugin Tony
23. Punalvasal (P.P.)	Fr. A. Santhanam
24. Thuraiyur (P.P.)	Fr. A. Benjamin Josephraj
25. Thirumanturai (P.P.)	Fr. E. Joseph Michaelraj
26. Vadaveekam (P.P.)	Fr. J. Bastin Britto
27. Viragalur (P.P.)	Fr. S. Augustine
28. Vilagam (P.P.)	Fr. M. Anthonysamy
29. Vizhapallam (P.P.)	Fr. G. Satheesh Yesudoss
30. Socius at St. Mary's Cathedral & Defender of the Bond at the Tribunal	Fr. A. Arockia Kennedy Rayan

2. INSTITUTIONS

30. Procurator/Property In - Charge	Fr. J. Antony Joseph
31. Educational Trusts	Fr. K. Kaspar
32. Director, Pastoral Centre	Fr. A. Rajamanickam
33. Rector, Minor Seminary	Fr. A. Martin De Porres

34. Hostel - Purathakudi	Fr. A. Kulandainathan
35. PSSS - Perambalur	Fr. S. J. Soosaimanickam
36. CBSE School - Correpondent, Assisipuram	Fr. M. Selvaraj

3. DIOCESAN PASTORAL COMMISSIONS

37. Family and Youth Commissions	Fr. A. James Raj
38. Charismatic Movement and Liturgy Commissions	Fr. I. Albert
39. Beschi Communications	Fr. A. Rajamanickam
40. Laity Commission	Fr. A. Benedict Dhiraviam
41. St. Paul's Hospital, Uthani (Mensch Trust)	Fr. E. Adaikalasamy

4. PRIESTS GOING ABROAD

42. Fr. P. Singarayar	(Milan, Italy-Studies)
43. Fr. I. John Kennedy	(Singapore-Pastoral Ministry)
44. Fr. I. James	(Rome-Studies, GS Seminary)
45. Fr. P. John Maria Vianney	(France-Pastoral Ministry)

5. LEARNING LANGUAGE

46. Fr. L. Rex Alex Silvester	(German)

6. ASSISTANTS

1.	Cathedral	- Fr. A. Bruceline Binith
		- Fr. Edmund Louis, MMI
2.	Poondi	- Fr. S. John Corneliyus
		- Fr. S. J. Sebastine, OFM. Cap.
3.	Thiruvaiyaru	- Fr. S. Anburaj
4.	Ammanpettai	- Fr. Ananthan Antony, SDM
5.	Annamangalam	- Fr. Sebastin Mariasusai, SHS
6.	Ayyampet	- Fr. G. Sebastian, OMI
7.	Elakurichi	- Fr. J. Robert, OFM. Cap.
8.	Michaelpatti	- Fr. Jeya Prakash, OMD
9.	Pullambadi	- Fr. L. Johnson, OMI
10.	Purathakudi	- Fr. Leo Adaikalaraj, MMI
11.	Vadagarai	- Fr. Joseph Victor, SDM
12.	Vadugarpet	- Fr. Antony Jeyaraj, CSC
13.	Varatharajanpet	- Fr. A. Amos Raj, OFM. Cap.
14.	Ariyalur	- Deacon from Jesuit Congregation
15.	Kulumur	- Deacon from Jesuit Congregation

7. TRANSFER OF TEACHING PRIESTS

Transfer list for all the Headmasters working in Hr. Sec. Schools

S. No	Name of the Priests	From	To
1.	Fr. L. Robert Selvan	St. Peter's, Viragalur	St. Xavier's, Purathakudi
2.	Fr. J. Amarsing Eliyazar	St. Xavier's, Purathakudi	LFHSS, Kumbakonam
3.	Fr. A. Varaprasadam	LFHSS, Annamangalam	St. Peter's, Viragalur
4.	Fr. G. Arockiaraj	LFHSS, Kumbakonam	LFHSS, Annamangalam

Transfer for all the BT Teachers (HM In-Charge) in High Schools

S. No	Name of Priests	From	To
1	Fr. A. Tony	LFHSS, Kumbakonam	St. Fatima HS, Vadaveekam
2.	Fr. D. Barnabas	St. Fatima HS, Vadaveekam	St. Thomas, HS, Manathidal
3.	Fr. R. Jayaraj	St. Thomas, HS, Manathidal	Bharathamadha HSS, Naduvalur
4.	Fr. K. Robert	Bharathamadha HSS, Naduvalur	St. Mary's HS, Thottiam
5.	Fr. K. Xavier	St. Mary's HS, Thottiam	St. Mary's HS, Ariyalur
6.	Fr. R. Frederick David	St. Mary's HS, Pallividai	St. Philominal's HSS, Kulumur
7.	Fr. V.E. Santha Kumar	St. Philominal's HSS, Kulumur	St. Mary's HS, Pallividai

8. RETIRING PRIESTS

1. Fr. P. Henry Pushparaj
2. Fr. S. I. Arulsamy
3. Fr. A. Packiasamy
4. Fr. A. Michaelsamy

N.B.:

- **The Appointments and Transfers will come into effect from Wednesday, 22.05.2024**
- **The Parish Priests, Asst. Parish Priests and others will take charge of their office on or before Thursday, 20.06.2024**
- **Priests working in the Schools will take charge of their new assignment on or before Monday, 01.07.2024**

Dear Rev. Frs. P. Henry Pushparaj, S.I. Arulsamy, A. Packiasamy and A. Michaelsamy,

With a grateful heart I appreciate and thank you in the name of all our Priests, Religious and Laity for all your services you have rendered to our diocese in various capacities in the past. As you retire from active pastoral ministry, I wish you a very happy and gracefilled life with good health of mind and body. Your service to our diocese will be ever remembered by all of us.

I am sure that your practical wisdom and knowledge will always enlighten our clergy and people.

Wishing you all the best,

Yours sincerely in Christ,

Most Rev. A. Jeevanandam,

Bishop of Kumbakonam.

FROM THE PROCURATOR'S OFFICE

Dear Rev. Fathers,

Greetings and prayerful wishes from Fr. Procurator

Audit of Accounts:

As per the direction of our Bishop and the Diocesan Finance Committee, the Auditor and myself will audit the accounts of the Parishes and institutions. Kindly keep the necessary bills and vouchers ready updated. Prior intimation, however, will be given to you about our visit.

⇨ Please collect and submit the Mass intention slip only on a monthly basis. Accumulation of Mass intentions is not encouraged.

⇨ Please collect and submit the Mass intention slip only on a monthly basis. Accumulation of Mass intentions is not encouraged.

⇨ You are requested to submit the medical bills on monthly basis only. For audit purpose, the bills dated prior to three months period will not be accepted.

⇨ Priests - Accounts :

⇨ The amount for the exonerated masses and the medical bills submitted by the priests will be entered in the account of individual priests maintained at the procurator's office.

⇨ The viatique will be entered once in six months i.e., at the end of March and September every year in the account of individual priests maintained in the office of the Procurator.

⇨ On request from the individual priest, the amount will, based on the availability of funds, be sent to the individual bank account.

⇨ **Diocesan Collections and other Contributions:**

⇨ **Please pay the** Diocesan Collections, Salary of teaching priests, Mass Intentions, Slab, Shop/Community hall rent etc. **only by cheque drawn** in the name of **"The Kumbakonam Diocese Society"** or **through wire transfer** to the Bank Account given below.

⇨ **Those who have not yet given SLAB for the period of 2022-2023 are requested to send the same** to the Bank Account given below as soon as possible.

⇨ ***Cash transaction IS NOT ENCOURAGED.***

⇨ **In case of wire transfer kindly inform us by the phone / mobile / WhatsApp message to 9443143288 / 9443846723.**

Bank Account Details

Name of the Account Holder	:	**Kumbakonam Diocese Society**
Name of the Bank	:	Indian Overseas Bank
Address of the Bank	:	Kamaraj Road, Kumbakonam
Bank Account Number	:	099001000005411
IFSC Code	:	IOBA0000990

⇨ **Annual Statement, Budget and Diocesan Collection:**

The forms relating to **Annual Statement, Budget and other Collections** have been sent by post to all the parishes and institutions. Kindly return the filled in forms at your earliest convenience.

⇨ **Priests who have not yet submitted the Last Will are requested to submit it as soon as possible.**

Yours in Christ Jesus,
Procurator.

கல்வி உதவித்தொகை நன்கொடை விவரம்

மே - 2024

நெ.	விபரம்	தொகை
1.	பூண்டிமாதா பேராலயம், பூண்டி	25,000
2.	திருச்சி புனித அன்னாள்சபை அருள்சகோதரிகள், அம்மாபேட்டை	4000
	நடுவலூர் பங்கு :	
3.	சவேரியார்பட்டி கிராமத்தின் சார்பாக	5000
4.	சவேரியார்பட்டி கல்வி உதவித்தொகை	5000
5.	அருள்சகோதரிகள் IHM, நடுவலூர்	1000
6.	சவேரியார்பட்டி மார்ட்டின் & பிரேம் குடும்பம்	10,000
7.	T. பழூர் - S. சேசுராஜ்	1000
8.	சுத்தமல்லி - S. ஆரோக்கியராஜ்	500
9.	சவேரியார்பட்டி - A. சவரிமுத்து	500
10.	அந்தோணிசாமி, மரியாயின் சேனை தலைவர்	500
11.	சவேரியார்பட்டி - சேவியர்	500
	வடகரை பங்கு :	
12.	பங்குத்தந்தை	5000
13.	Bon Secours Convent	1000
14.	RC தொடக்கப்பள்ளி	1000
15.	தோமினிக் சாவியோ அன்பியம்	500
16.	குழந்தை தெரசாள் அன்பியம்	500
17.	சூசையப்பர் அன்பியம்	300
18.	ஆரோக்கியமாதா அன்பியம்	500
19.	லூர்து அன்னை ஜெபக்குழு	1000
20.	அந்தோணியார் அன்பியம்	500
21.	இளைஞர்கள்	500
22.	பீடச்சிறார்கள்	500
23.	மறைக்கல்வி குழந்தைகள்	500
24.	கொடமங்கலம் கனிமொழி தேவன்	200
25.	மேலையூர் மரியதாஸ்	100

26.	கீழத்தெரு பரமசிவபுரம்	100
27.	விட்டலூர் செல்லியாள்	500
28.	MTR புரம்	500
29.	இலந்துறை கிராமம்	1000
30.	மேலதிருமலைராஜபுரம்–அம்பிகாபதி, நிர்மலாமேரி	500
	திருவையாறு பங்கு :	
31.	பங்குத்தந்தை	10,000
32.	அருள்சகோதரிகள் FIHM	1000
33.	G. ஞானகுணசேகர்	500
34.	S. பீட்டர் யூஜின்ராஜ்	1000
35.	S. அற்புதராஜ்	200
36.	T. லியோ	200
37.	A. எட்வின்ராஜ் (அன்னை டிராவல்ஸ்)	100
38.	M. நெப்போலியன்	200
39.	R. ரிச்சர்டு மார்டின் – ரோசிலின்	1000
40.	D. மிஷேல்தாஸ்	2000
41.	C. சார்லஸ்	500
42.	நெல்சன் நிக்கோலஸ்	200
43.	அலெக்ஸாண்டர்	500
44.	ஞானதிக்கம் தெரு	500
45	செங்கமேடு– அருள்சகோதரிகள் FIHM	500
46.	செங்கமேடு கிராமம்	1000
47.	வீரசிங்கம்பேட்டை கிராமம்	1000
48.	இராயம்பேட்டை கிராமம்	500
49.	T. அபிரகாம்	200
50.	RYS. பர்ணபாஸ்	500
51.	திங்களூர் செபஸ்தியார் கோவில்	500
52.	திங்களூர் அந்தோணியார் ஆலயம்	1000
53.	திங்களூர் எம்.ஜி.ஆர் நகர்	200
54.	திங்களூர் புனித வின்சென்ட் தே பவுல்சபை	500
55.	70, பெரமூர் கிராமம்	500
56.	ஈச்சங்குடி கிராமம்	200

57.	தில்லைஸ்தானம் அந்தோணி மல்லிகா	500
58.	தில்லைஸ்தானம் புஷ்பராஜ்	200
59.	திருப்பழனம் கிராமம்	100
60.	கண்டியூர் கிராமம்	500
61.	திருவேதிக்குடி கிராமம்	300
62.	ஈச்சங்குடி ரெக்ஸ் அன்பரசன்	200
63.	பெயரிடாத (2) நபர்கள்	300
	விளாகம் பங்கு:	
64.	பங்குத்தந்தை	5000
65.	R. ஆனந்தராஜ்	200
66.	A. சேசுராஜ்	100
67.	P. ஆரோக்கியராஜ்	200
68.	K. சாமிராஜ்	500
69.	ஜெயபிரகாசு	100
70.	கீழமிக்கேல்பட்டி பங்குத்தந்தை	5000
71.	எஸ். புதூர் பங்குத்தந்தை	5000
72.	கூவத்தூர் பங்குத்தந்தை	5000
73.	அம்மன்பேட்டை பங்குத்தந்தை	5000
74.	அருள்தந்தை I.T. அகஸ்டின்	10,000
75.	புனல்வாசல் பங்குத்தந்தை	10,000
76.	செம்பரை, ஜூலியஸ் – பிலோமினாள்	500
77.	உறையூர் F. ஆரோக்கியதாஸ்	1000
78.	கிள்ளுக்கோட்டை பங்குத்தந்தை	10,000
79.	பெயரிடாத நபர்	300
	பாளையம் பங்கு :	
80.	பங்குத்தந்தை	9000
81.	அருள்சகோதரிகள் FIHM	1000
82.	பங்குமக்கள்	5000
83.	வில்சன், நிரூபர்	5000
84.	ஆரோக்கியமாதா கோவில் தெரு	1000
85.	ஜார்ஜ் கென்னடி	500

86.	சகாயலூயி, அன்பு மேரி	1500
87.	குரும்பலூர் இறைமக்கள்	1000
88.	ரெங்கநாதபுரம் புனித செபஸ்தியார் கோவில்	1000
89.	பெயரிடாத 3 நபர்கள்	1100
	கொணலை பங்கு :	
90.	பங்குத்தந்தை	5000
91.	சிறுகனூர் சவேரியார் கோவில்	2000
92.	சிறுகனூர் விண்ணக அரசி மரியாயின் சேனை	1000
	மொத்தம்	1,86,300

FEATURE FILM ON SR. RANI MARIA

'FACE OF THE FACELESS'

"The Face of the Faceless" portrays the inspiring journey of Blessed Rani Maria, a Catholic nun whose unwavering dedication to serving and empowering women in Indore, Madhya Pradesh, India, transcended religious boundaries and touched countless lives. Through her profound spirituality and selfless service, she exemplified universal oneness, leaving an indelible mark on all who encountered her. This film not only offers a captivating cinematic experience but also provides a profound opportunity for emotional and spiritual reflection.

We firmly believe that screening this film during common gatherings of priests and nuns, such as monthly recollections and CRI meetings, will serve as a profound spiritual exercise and evangelical mission, inspiring and enriching all participants.

CU: Xavier Institute of Comminications,
St Xacier's College (Autonomous),
Mumbai - 400 001.
Contact us: +917021140676/7845641800/
contact@trilightcreations.com

குடந்தை மறைமாவட்ட மறைப்பணி மைய செயற்பாடுகள் 2018 ஜூன் முதல் 2024 மே வரை

1. கத்தோலிக்கச் சபையிலிருந்து பிரிந்த சபைகளுக்குச் சென்ற குடும்பங்களைச் சந்தித்து திருச்சபைக்கு மீண்டும் அழைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. பங்குத் தந்தையர்களின் ஒத்துழைப்பும் ஈடுபாடும் குறைவாக இருந்தது.

2. அன்பியங்களை எல்லா பங்குத்தளங்களிலும் ஏற்படுத்த வேண்டும் என்ற முனைப்போடு திட்டமிட்டுச் செயல்படுத்தினோம். மறைவட்ட மையங்களில் அன்பியப் பயிற்சியும், மறைமாவட்ட அளவில் SET மஹாலில் அன்பிய மாநாடும் நடைபெற்றது. இதில் 650 பேர் கலந்துக்கொண்டுப் பயன்பெற்றார்கள்.

3. பூண்டி தியான மையத்தில் தமிழக மறைமாவட்டங்களின் அன்பியச் செயலர் தந்தையர்கள் மற்றும் பொறுப்பாளர்கள் 225 பேர் ஒன்றுகூடி ஒருநாள் கருத்தரங்கு நடைபெற்றது.

4. நற்செய்தி அறிவிப்பு பயிற்சி 6 மறைவட்ட மையங்களிலும் சிறப்பாக மறைமாவட்ட மையத்தில் SET மஹாலில் நற்செய்தி அறிவிப்பு மாநாடு நடைபெற்றது. இம்மாநாட்டில் 625 பேர் கலந்துக் கொண்டது பாராட்டுக்குரியது. அருள்தந்தை உபால்டு அவர்கள் சிறப்பு கருத்துரையாளராக செயல்பட்டது வரவேற்கத்தக்கது.

5. மறைமாவட்ட அளவில் 157 நற்செய்தி பணியாளர்களுக்கு இரண்டு நாள்கள் நற்செய்தி அறிவிப்பு பயிற்சி கருத்தரங்கு பூண்டி தியான மையத்தில் நடைபெற்றது. அருள்தந்தை மைக்கேல்ராஜ், மேதகு ஆயர் F. அந்தோனிசாமி, அருள்தந்தை. A. மரிய பிரான்சிஸ், அருள்தந்தை N. சின்னப்பராஜ் இவர்களால் கருத்தரங்கு வழங்கப்பட்டது. பங்கேற்பாளர்கள் அனைவருக்கும் சான்றிதழ் வழங்கப்பட்டது.

6. இயேசுவின் திருஇதயம் மற்றும் மரியாவின் மாசற்ற இருதய பக்தியை புதுப்பிக்கும் நோக்கத்தில் 92 பங்குகளில் தலைமையகத்தில் உள்ள குடும்பங்களுக்கு 14 ஆயிரம் இயேசுவின் திருஇருதயம் மற்றும் மரியாவின் மாசற்ற இருதயப் படங்கள் ரூ. 9,20,000 செலவில் தயாரிக்கப்பட்டு வழங்கப்பட்டன.

7. மறைக்கல்வி – நன்னெறி பாடப்புத்தகங்கள் எல்லா பள்ளிகளிலும் உள்ள மாணவ மாணவிகளுக்கு வழங்கப்படுகின்றன. மறைக்கல்வி நன்னெறி பாடங்களின் பள்ளி ஆய்வானது மூன்று குழுக்களாகப் பிரிந்து மறைமாவட்டத்திலுள்ள அனைத்து பள்ளிகளிலும் ஆண்டாய்வு நடைபெற்றது.

8. ஏலாக்குறிச்சியில் வீரமாமுனிவர் கிராம வேதியர் பயிற்சி 42 நபர்களுக்கு ஒருவார காலத்திற்கு இலவசமாக பயிற்சி அளிக்கப்பட்டு மறைமாவட்ட சான்றிதழ் வழங்கப்பட்டது.

9. ஆண்டுதோறும் இருபால் ஆசிரியர்களுக்கு ஆண்டுத்தியானம் ஒருநாள் வழங்கப்பட்டது. ஆசிரியர்கள் பங்கேற்பு சிறப்பாக அமைந்தது எங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கின்றது.

10. அகில உலக ஆயர்கள் மாமன்ற நிகழ்வு மறைமாவட்ட மறைப்பணி மையத்தில் தொடங்கப்பட்டது. அனைத்து மறைவட்ட மையங்களிலும் மாமன்ற நிகழ்வைப்பற்றிய கருத்தரங்கு நடத்தப்பட்டது. அனைத்து பங்குகளுக்கும் மாமன்ற கொடி கொடுக்கப்பட்டு மாமன்ற நிகழ்வு தொடங்கப்பட்டது. 30,000 வினாத்தாள்கள் அச்சடிக்கப்பட்டு எல்லா பங்குகளுக்கும் கொடுக்கப்பட்டது. மறைவட்டங்களில் மாமன்ற நிகழ்வு நடத்தப்பட்டு 7,000 விடைத்தாள்கள் பெறப்பட்டன. விடைத்தாள்கள் அனைத்தும் அதன் தலைப்பின்கீழ் ஒருங்கிணைந்து மறைமாவட்டத்தில்

மாமன்றத்திற்கான வரைவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு தமிழக ஆயர் பேரவை செயலர் தந்தை அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

11. மறைமாவட்ட வேதியர்களுக்கு ஓய்வு ஊதிய வைப்புநிதி வேதியர்களின் பெருமுயற்சியால் உருவாக்கப்பட்டு ஒவ்வொரு வேதியருக்கும் தலா ரூ.1,29,000 வங்கியில் போடப்பட்டது மிகவும் சிறப்பான செயல்பாடாக கருதப்படுகிறது.

12. வேதியர்களின் வெள்ளிவிழா நிகழ்வும், பணி ஓய்வு பெற்ற வேதியர்கள் R. இம்மானுவேல், P.அன்பழகன், A. ஜேக்கப், A. ஜான்சன், R. செல்வகுமார் ஆகியோருக்கு பாராட்டுவிழாவும், மறைப்பணி மையத்தில் நடைபெற்றது.

13. மறைப்பணி மையத்தின் நிதியானது சிறப்பாக திட்டமிடப்பட்டு, வேதியர்களின் ஒத்துழைப்பால் சீரமைக்கப்பட்டு, மறைப்பணி மையத்தின் நிதிநிலையானது தன்னிறைவு பெற்றுள்ளது பாராட்டுக்குரியது.

14. 20 பங்குகளில் 5 பீடச்சிறுவர்கள் என 100 சீருடைகள் வழங்கப்பட்டன.

15. தேர்தல் காலங்களில் எல்லா பங்குகளிலிருந்து பொறுப்பாளர்களை அழைத்து நாடாளுமன்ற மற்றும் சட்டமன்ற தேர்தலில் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்றும், எப்படி சேர்ந்து செயல்பட வேண்டும் என திட்டமிட்டு ஒருங்கிணைந்து செயல்பட உற்சாகப்படுத்தப்பட்டது.

இவண்,

அருள்பணி A. மரிய பிரான்சிஸ்,
இயக்குநர், மறைப்பணி மையம்

இளைஞர் மற்றும் குடும்பப் பணிக்குழுக்கள்

04.05.24 பாளையம் பங்கில் உள்ள இளையோர்களை சந்தித்து குழு செயல்பாடுகள் பற்றி கலந்தாலோசிக்கப்பட்டது. கிளைப்பங்குகளில் குழுக்கள் மீண்டும் செயல்பட அறிவுறுத்தப்பட்டது.

25.05.24 வடகரை பங்கில் இளையோர் குழுக்கள் சந்திக்கப்பட்டன. குழுவாக செயல்படுதலின் அவசியத்தை உணர கருத்துரை வழங்கப்பட்டது.

26.05.24 திருச்சி கருமண்டபத்தில் இளையோர் பொன்விழா ஆண்டு மாநில அளவில் சிறப்பாக கொண்டாடப்பட்டது.

குறிப்பு : கடந்த இரண்டு ஆண்டுகளும் சிறப்பாக செயல்பட உடன் உழைத்த எல்லா நல் உள்ளங்களுக்கும் மனமார்ந்த நன்றி.

ஜூன் மாதம் திருமணத் தயாரிப்புப் பயிற்சி நடைபெறும் இடங்கள்

வ.எண்	தேதி	இடம்
1	ஜூன் 01 மற்றும் 02 சனி மற்றும் ஞாயிறு	குழந்தை இயேசு திருத்தலம், நம்பர்-1, டோல்கேட், திருச்சி.
2	ஜூன் 15 மற்றும் 16 சனி மற்றும் ஞாயிறு	மேய்ப்புப்பணி மையம், கும்பகோணம்.

அருள்பணி. I. ஜான் கென்னடி,
செயலர், இளைஞர் மற்றும் குடும்பப் பணிக்குழுக்கள்.

விவிலியம் மற்றும் அன்பியப் பணிக்குழுக்கள்

மே மாதம் 01 ஆம் தேதி முதல் 10 ஆம் தேதி வரை **VBS** வகுப்புகள் மறைவமாவட்டத்தின் சில பங்குகளில் நடைபெற்றன.

10.05.24 குடந்தை துய மரியன்னை பேராலய பங்கின் குழந்தைகளுக்கு **VBS** வகுப்புகளின் நிறைவு விழா நடைபெற்றது.

19.05.24 காணியிருப்பு பங்கில் அன்பியப் பொறுப்பாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

20.05.24 நாச்சியார்கோவில் பங்கு திருப்பத்துறையில் அன்பியப் பொறுப்பாளர்கள் சந்திப்பு நடைபெற்றது.

அருள்பணி. A. பெனடிக்ட் திரவியம்,
செயலர், விவிலியம் மற்றும் அன்பியப் பணிக்குழுக்கள்.

பொதுநிலையினர் பணிக்குழு கிறிஸ்தவ ஐக்கிய பேரவை பணிக்குழுக்கள்

29.04.24 கும்பகோணம் AJC பள்ளி வளாகத்தில் கிறிஸ்தவ ஐக்கிய பேரவைக்கூட்டம் நடைபெற்றது. இதில் TELC, CSI, AJC உள்பட 10-த்திற்கும் மேற்பட்ட பிற கிறிஸ்தவ சகோதர சபை போதகர்கள் கலந்துக்கொண்டார்கள். சமயங்களின் ஒன்றிணைப்பும் இன்றைய அரசியல் சூழ்நிலையைப் பற்றியும் தேர்தல் விழிப்புணர்வு பற்றியும் மேலும் நல்ல தலைவர்களை தேர்ந்தெடுத்தல் பற்றியும்

கூட்டம் நடைபெற்றது. சிறப்பு ஜெப வழிபாடும் நடைபெற்றது. அருள்பணியாளர் V. மரியசூசை இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து வரவேற்று நன்றி கூறினார்.

19.05.24 காணியிருப்பு பங்கில் பங்குப்பேரவை அமைக்கும் பயிற்சி கருத்தரங்கு கூட்டம் நடைபெற்றது. இதில் சுமார் 80 நபர்கள் கலந்துக்கொண்டனர். பங்குத்தந்தை, அருள்பணி M. ஜோசப் அவர்கள் இக்கூட்டத்திற்கு சிறப்பான ஏற்பாடுகளை செய்திருந்தார்கள்.

இக்கூட்டத்தில் பங்கில் பொதுநிலையினரின் பங்கேற்பு முக்கியத்துவத்தையும் பங்குப் பணிக்குழுவின் நோக்கம், பொறுப்பு, கடமைகள் இவைகள் பற்றியும் விளக்கங்களும் தெளிவும் கொடுக்கப்பட்டன.

பொதுநிலையினர் பணிக்குழு செயலர் அருள்பணி V. மரியசூசை அவர்கள் பங்குத்தந்தையோடு இணைந்து இக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். விரைவில் இப்பங்கில் பங்குப்பேரவை அமைக்க உறுதிசெய்யப்பட்டது.

இக்கூட்டத்திற்கு ஏற்பாடுகள் செய்து உதவிசெய்த பங்குத்தந்தைக்கும், ஒத்துழைப்பு நல்கிய பங்குமக்களுக்கும் பணிக்குழுவின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்த ஆண்டு "கிறித்தவமும் அரசியலும்" என்ற மையக் கருத்தில் 23.06.2024 அன்று பொதுநிலையினர் ஞாயிறு கொண்டாடப்படுகிறது. மாநில பொதுநிலையினர் பணிக்குழு அனுப்பியுள்ள திருவழிபாட்டுக் குறிப்புகள்,

துண்டுப்பிரசுரம் அனைத்தும் பங்குகளுக்கு அனுப்பப்படும். பொதுநிலையினர் ஞாயிறை தங்கள் பங்குகளில் சிறப்பாகக் கொண்டாட பங்குத்தந்தை, அமைப்புகள், இறைமக்கள் அனைவரையும் அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவண்,

அருள்பணி V. கிறிஸ்துராஜ் மரியசூசை,
செயலர், பொதுநிலையினர் மற்றும் சமய
நல்லிணக்க பணிக்குழுக்கள்.

பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு

16.04.24 முதல் 20.04.24 — கும்பகோணம் மறைவட்டத்தில் உள்ள அருளானந்தபுரம், பெரபடி, சித்தாலத்தூர், நாச்சியார்கோவில், கொடமங்கலம், குமாரமங்கலம், ரெகுநாதபுரம், மேலதிருமலைராஜபுரம், கீழதிருமலைராஜபுரம் ஆகிய ஊர்களில் தலித் கிறித்துவ மக்கள் மன்ற உறுப்பினர்கள் சந்திக்கப்பட்டார்கள்.

22.04.24 முதல் 24.04.24 — மைக்கேல்பட்டி மறைவட்டத்தில் உள்ள கண்டியூர், சரகூர், கண்டமங்கலம், பழமானேரி, கடுவெளி, கோனேரிராஜபுரம், நடுகாவேரி, வளப்பக்குடி ஆகிய ஊர்களில் தலித் கிறித்துவ மக்கள் மன்ற உறுப்பினர்கள் சந்திக்கப்பட்டார்கள்.

26.04.24 முதல் 28.04.24 — ஜெயங்கொண்டம் மறைவட்டத்தில் உள்ள பூவாணிப்பட்டு, முருகன்கோட்டை, எரவாங்குடி, பெரியகிருஷ்ணாபுரம், தென்னூர், கீழநெடுவாய்,

வரதராசன்பேட்டை, புதுகுப்பம் மற்றும் ரெட்டித்துத்தூர் ஆகிய ஊர்களில் உள்ள தலித் கிறித்தவ மக்கள் மன்ற உறுப்பினர்கள் சந்திக்கப்பட்டார்கள்.

11.05.24 21.05.24 அன்று தலித் கிறத்துவ வார்டு உறுப்பினர்களை ஒருங்கிணைக்க முன் தயாரிப்புக் கூட்டம் பணிக்குழுவின் அலுவலகத்தில் செயலர் தந்தை A. இருதயராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. இதில் வேதியர் S. அடைக்கலராஜ் களப்பணியாளர்கள் திரு ப்ராங்கிளின் அந்தோணி மற்றும் களப்பணியாளர் திரு. A. தமிழரசன் கலந்துக்கொண்டார்கள்.

29.04.24 திருச்சி உதயதீபத்தின் மூலம் தொழிற்கல்வி படிக்கும் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட கல்வி உதவித்தொகையை நேரடியாக களப்பணியார்கள் சென்று வழங்கினார்கள்.

இவண்,

அருள்பணி. A. இருதயராஜ்,

செயலர், பட்டியலினத்தார் / பழங்குடியினர் பணிக்குழு.

செயின்ட் பீட்டர்ஸ்

கலை மற்றும் அறிவியல் கல்லூரி

(இருபாலர்)

கும்பகோணம் மறைமாவட்ட நிர்வாகத்திற்கு உட்பட்டது
(G.O. MS.No:91/28.05.2019)
இணைப்பு : பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி

சிறப்பம்சங்கள்...

- அர்ப்பணிப்பும், அனுபவமும் கொண்ட பேராசிரியர்கள்.
- மிகக்குறைந்த கல்விக் கட்டணம்.
- தவணை முறையில் கட்டணம் செலுத்தும் வசதி.
- அனைத்து வழித்தடங்களிலும் கல்லூரிப் பேருந்து வசதி.
- ஆங்கிலத்தில் சரளமாக பேச ஆண்டு முழுவதும் பயிற்சி.
- இணையதள வசதியுடன் கூடிய கணினி ஆய்வகம்.
- மேம்படுத்தப்பட்ட நூலகம்.
- கல்லூரி வளாகத்திலேயே இறுதியாண்டு மாணவர்கள் வேலைவாய்ப்பு பெற சிறப்பு முகாம்கள்.
- தேசிய, மாநில மற்றும் மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் வெற்றிபெற சிறப்பு பயிற்சி.
- கல்லூரி வளாகத்தில் கேன்டீன் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட (RO) குடிநீர் வசதி.
- கண்காணிப்பு (CCTV) கேமரா பாதுகாப்பு உள்ள கல்லூரி.
- பசுமையான இயற்கைச் சூழலில் அமைந்துள்ள பரந்த கல்லூரி வளாகம்.
- விசாலமான மற்றும் காற்றோட்டமுள்ள சிறந்த வகுப்பறைகள்.
- சமூகப் பொறுப்பையும், நாட்டுப்பற்றையும் விதைக்க நாட்டு நலப்பணித்திட்ட (NSS) முகாம்கள்.
- ஆளுமை திறன்களை வளர்க்க நிகழ்த்துக்கலைகள் (Performing Arts) மற்றும் பாடத்திட்டம் சாரா (Extra Curricular) செயல்பாடுகள்.
- மாணவ, மாணவியருக்கு தனித்தனி தங்கும் விடுதி (Hostel) வசதி.

சிறப்பு கட்டணச் சலுகைகள்...

- பெற்றோரை இழந்த ஆதரவற்ற மற்றும் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கு சிறப்பு கட்டணச் சலுகை.
- 12-ஆம் வகுப்பில் 80 சதவீதம் அல்லது அதற்கு மேல் மதிப்பெண் பெற்ற மாணவ, மாணவியருக்கு சிறப்பு கட்டணச் சலுகை வழங்கப்படும்.
- தகுதியுள்ள மாணவ, மாணவியருக்கு அரசின் கல்வி உதவித்தொகை.

சேர்க்கை விபரங்களுக்கு
தொடர்புகொள்ள :

முனைவர் திருமதி. **அந்தோணியம்மாள்**
முதல்வர் (பொ)
6379143985

திரு. **பால் எட்வின் பொன்னாட்சா**
உதவி பேராசிரியர்
97875 65731

திருமதி. **ஆரோக்கிய வினோதாமேரி**
உதவி பேராசிரியர்
96002 88771

திருமதி. **விஜி**
உதவி பேராசிரியர்
82486 48567

திரு. **ஆண்டோ ஜெகன்**
அலுவலர்
63795 73046

College Office 63745 73094
spcollege2020@gmail.com
Download Now Application
https://stpeterscollegeandimadam.com



மேலநெடுவாய், ஆண்டிமடம்-621 801. Ph : 6374573094.
E-Mail : spcollege2020@gmail.com. Web : https://stpeterscollegeandimadam.com

St. UMA Press
Jkm. 9124041503

KUMBAKONAM DIOCESE NEWS LETTER



Blessing of the Chapel : Sembarai, Kattur Ramanathapuram Parish



Blessing of the Chapel : Savariyarpatti, Naduvalur Parish



Blessing of the Marriage Hall: Punalvasal



Blessing of the Chapel: Puthunaduvalur, Palayam

Bishop's House, Post Box No. 3, Kumbakonam - 612 001.
E-mail: kumbakonamdiocese@gmail.com
Webpage : www.dioceseofkumbakonam.org.

Udaya Offset Printers - Kmu. Cell : 94436 51112